

# வேளாண்மைத் துறை

## மானியக் கோரிக்கை எண் - 5

## அறிவிப்புகள்
## 2012 - 2013

# வேளாண்மைத் துறை

## மானியக் கோரிக்கை எண் - 5

# அறிவிப்புகள்
## 2012 - 2013


**திரு. செ. தாமோதரன்**
**வேளாண்மைத் துறை அமைச்சர்**

## 1. ஒருங்கிணைந்த பண்ணைய முறை திட்டம்

வேளாண்மையில் இரண்டாம் பசுமைப்புரட்சியை ஏற்படுத்தி விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்த, **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின்** ஆணைப்படி, கால்நடை, கோழி, மீன்வளர்ப்பு, வேளாண் காடு வளர்ப்பு போன்ற தொழில்களை வேளாண் தொழிலுடன் மேற்கொண்டால், விவசாயிகளின் குடும்ப வருமானம் பெருகும் என்பதைக் கருத்தில் கொண்டு, வட்டாரத்திற்கு ஒரு கிராமம் வீதம் தமிழகத்தில் உள்ள அனைத்து வட்டாரங்களிலும் ஒருங்கிணைந்த பண்ணைய மாதிரி கிராமம் அமைக்கப்படும். மேலும், பல்வேறு பகுதிகளுக்கு உகந்த பயிர்களை கண்டறிவதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு உணவு தானியங்களில் அதிக மகசூல் எடுக்கும் விவசாயிகளுக்கு சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும்.

## 2. நுண்ணீர் பாசன மாதிரி கிராமம்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின்** தலைமையிலான இவ்வரசு, கடந்த ஆண்டே நுண்ணீர் பாசனத்திற்கு சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100% மானியமும், இதர விவசாயிகளுக்கு 75% மானியமும் அளித்து உற்சாகப்படுத்தியது. இதனை பரவலாக்கும் நோக்குடன், நுண்ணீர் பாசனத்தை கிராமம் முழுவதும் முழுமையாக மேற்கொள்ள அனைத்து மாவட்டங்களிலும் மாவட்டம் ஒன்றிற்கு தலா ஒரு நுண்ணீர் பாசன மாதிரி கிராமம் அமைக்கப்படும் மற்றும் இதற்குத் தேவையான பாசனக் கருவிகள் மானியத்தில் வழங்கப்படும். மேலும், தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி எளிமையாகவும், விரைவாகவும் வயலாய்வு மேற்கொண்டு திட்டப்பலன்களைக் கண்காணிக்கும் புதிய முறையும் செயல்படுத்தப்படும்.

## 3. இயற்கை வேளாண்மை

மக்கள் நலனில் மிகுந்த அக்கறையுள்ள **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின்** ஆணைப்படி, உணவுப் பாதுகாப்பை உறுதி செய்து நஞ்சற்ற இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்கும் வகையில் இயற்கை வேளாண்மை குறித்த புதிய கொள்கை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## 4. தனிநபர் வேளாண் காப்பீட்டுத் திட்டம்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின்** ஆணைப்படி, தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தில் உள்ள இடர்ப்பாடுகளை அகற்றி, உடனடியாக விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க, தனிநபர் வேளாண் காப்பீட்டுத் திட்டம் முன்மாதிரித் திட்டமாக நடப்பாண்டில் வேலூர் மாவட்டம் நெமிலி வட்டாரத்திலும், விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை வட்டாரத்திலும் செயல்படுத்தப்படும்.

## 5. சமுதாய வானொலி நிலையங்கள்

உழவர் சமுதாயம் முன்னேற வானொலி நிலையங்கள் பெரும் பங்காற்றுகின்றன. கோவையில் இயங்கி வரும் சமுதாய வானொலி நிலையத்தினால் அப்பகுதி விவசாயிகள் அடைந்துவரும் நற்பலனை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகக் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் வேளாண் அறிவியல் மையங்களில், வரும் 3 ஆண்டுகளில் 28 சமுதாய வானொலி நிலையங்கள், **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின்** ஆணைப்படி, ரூ.14 கோடி நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படும்.

## 6. மானாவாரி பயிர்கள் உற்பத்தித் திட்டம்

மானாவாரிப்பகுதி விவசாயிகளின் வருமானம் பெருக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், இக்ரிசாட் எனப்படும் மித வறண்ட பகுதிகளுக்கான பன்னாட்டுப்பயிர் ஆராய்ச்சி மையத்தின் (ICRISAT), உயர் தொழில் நுட்ப ஆலோசனையுடன் மானாவாரி பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு, இதற்காக, மண்வள மேம்பாட்டுடன் தேவையான உதவிகள் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின்** ஆணைக்கிணங்க, ரூ.13.05 கோடி ஒதுக்கீட்டில் விவசாயிகளுக்கு 50% மானியத்தில் வழங்கப்படும்.

## 7. நடவு முறை துவரை சாகுபடி

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின்** ஆணைக்கிணங்க, 10 மாவட்டங்களில் 30,000 எக்டர் பரப்பளவில் ரூ.11.40 கோடி நிதி ஒதுக்கீட்டில் தமிழக பயறு வகை பற்றாக்குறையினை ஈடுசெய்ய, நடவு முறை துவரை சாகுபடி எனும் புதிய உத்தி மூலம் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் பொருட்டு, முழு மானியத்தில் விலையில்லா செயல் விளக்கங்கள், இடுபொருள் மானியங்கள், சாகுபடி ஊக்கத்தொகை இவற்றின் மூலம் துவரை சாகுபடியினை ஊக்குவிக்கும் ஒட்டுமொத்த அணுகுமுறைத் திட்டம் செயல்படுத்தப்படும்.

## 8. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு முன்னுரிமை கொடுத்தல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின்** ஆணைப்படி, நடப்பாண்டில் ரூ.5.85 கோடி நிதி ஒதுக்கீட்டில் 385 வட்டாரங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளின் மேம்பாட்டிற்காக இளைஞர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, வட்டார அளவில் அமைக்கப்படும் விவசாயக் குழுக்கள் பயன்பெறும் பொருட்டு அந்தந்த பகுதிக்கேற்ற கருவிகள், இயந்திரங்கள் விலையில்லாமல் வழங்கப்படும்.

## 9. வேளாண் தொழிலாளர் குழுக்கள்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின்** ஆணைப்படி, நடப்பாண்டில் ரூ.4.59 கோடி ஒதுக்கீட்டில், விதைப்பு முதல் அறுவடை வரையிலான அனைத்து பணிகளையும் காலத்தே மேற்கொள்ள நடப்பு ஆண்டில் மாவட்டத்திற்கு ஒன்று வீதம், இளைஞர்களை உள்ளடக்கிய 30 வேளாண் தொழிலாளர் குழுக்கள் தமிழகம் முழுவதும் அமைக்கப்பட்டு, இக்குழுக்களுக்கு தேவையான கருவிகள், இயந்திரங்கள் விலையில்லா அடிப்படையில் வழங்கப்படுவதோடு, இவற்றை இயக்கவும், பராமரிக்கவும் உரிய பயிற்சிகள் அளிக்கப்படும்.

## 10. பசுந்தாள் உரம் மற்றும் மண்புழு உரம்

தேவைக்கும் அதிகமான இரசாயன உர உபயோகத்தால் குறைந்து விட்ட மண்வளத்தினை மேம்படுத்திட **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின்** தலைமையிலான இவ்வரசு, பசுந்தாள் உரம் மற்றும் மண்புழு உர உபயோகத்தினை அதிகரித்து இயற்கை வேளாண்மையை பெருமளவில் ஊக்குவிக்க 1,000 மெட்ரிக் டன் பசுந்தாள் உர விதைகள், பசுந்தாள் பயிர்களை மடக்கி உழ, வாடகைக்கு சுழல் கலப்பைகள், 1,300 மண்புழு உரம் தயாரிக்கும் மையங்கள் அமைக்க ரூ.5.45 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 11. திரவ உயிர் உர உற்பத்தி

தற்போது திட நிலையில் விநியோகம் செய்யப்பட்டு வரும் உயிர் உரங்களின் நிலைத்தன்மை 6 மாதங்கள் மட்டுமே என்பதைக் கருத்தில் கொண்டு, **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின்** ஆணைப்படி, ரூ.2.75 கோடி நிதி ஒதுக்கீட்டில், இதைக்காட்டிலும் அதிக பயன் மற்றும் நிலைத்தன்மையுடைய திரவ உயிர் உரங்களை உற்பத்தி செய்ய, உயிர் உர உற்பத்தி மைய உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.

## 12. வேளாண் பட்டயப்படிப்பு

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின்** ஆணைப்படி, கிராமப்புற இளைஞர்களுக்கு வேளாண் சார்ந்த வேலை வாய்ப்பை ஏற்படுத்தும் வகையில் நடப்பாண்டு, புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான்மலையில் மாநில வேளாண் பயிற்சி நிலையத்தில் இரண்டாண்டு வேளாண் பட்டயப்படிப்பு ரூ.2 கோடி நிதி ஒதுக்கீட்டில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மூலம் துவங்கப்படும்.

## 13. நீர்வடிப்பகுதி பசுமைத் திட்டம்

விதை முதல் விற்பனை வரையிலான விவசாயிகளின் அனைத்துத் தேவைகளையும் நிறைவு செய்து ஒட்டுமொத்த கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு "நீர்வடிப்பகுதி பசுமைத் திட்டம்" **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின்** ஆணைப்படி, நடப்பாண்டில் ரூ. 2.74 கோடி மதிப்பீட்டில் திருச்சி மாவட்டம், நாட்டார்பட்டி நீர்வடிப்பகுதியிலும், ரூ.2.52 கோடி மதிப்பீட்டில் வேலூர் மாவட்டம், தும்பேரி நீர்வடிப் பகுதியிலும் செயல்படுத்தப்படும்.

## 14. தென்னங்கன்றுகள் உற்பத்திப் பண்ணை

விவசாயிகளுக்கு தரமான தென்னங்கன்றுகளை வழங்குவதோடு, உயர் தொழில்நுட்பம் குறித்து அறிந்து கொள்ளும் வகையில், தென்னை வளர்ச்சி வாரியத்தின் மூலம் முதன்முறையாக திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை தாலுக்கா, ஜல்லிப்பட்டி கிராமத்தில் செயல் விளக்கம் மற்றும் தென்னங்கன்றுகள் உற்பத்திப் பண்ணை அமைக்கப்படவுள்ளது. இதற்காக **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின்** ஆணைப்படி, 82.66 ஏக்கர் நிலப்பரப்பு தென்னை வளர்ச்சி வாரியத்திற்கு வழங்கப்படும். மேலும், மாநில தென்னை நாற்றுப் பண்ணைகளில் குட்டை x நெட்டை மற்றும் குட்டை இரக வீரிய ஒட்டுத் தென்னங்கன்றுகளை அதிக அளவில் உற்பத்தி செய்யவும், பண்ணைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 15. தோட்டக்கலை மாதிரி கிராமங்கள்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின்** ஆணைப்படி, தோட்டக்கலை பயிரில் உற்பத்தியை பெருக்க, திருவள்ளூர், வேலூர், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு, கோவை, நீலகிரி, திருச்சி, பெரம்பலூர், மதுரை, தேனி, திண்டுக்கல், இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி ஆகிய 15 மாவட்டங்களில் மாவட்டத்திற்கு ஐந்து கிராமங்கள் வீதம் 40 முதல் 100 எக்டர் பரப்பில் தோட்டக்கலை மாதிரி கிராமங்கள் அமைத்து, உயரிய தோட்டக்கலைத் தொழில்நுட்பங்கள் விவசாயிகளுக்குப் பயிற்றுவிக்கப்படும்.

## 16. பந்தல் காய்கறி சாகுபடியினை ஊக்குவித்தல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின்** ஆணைப்படி, விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் நடப்பாண்டில் ரூ.7.78 கோடி மதிப்பீட்டில், பாகல், புடல், பீர்க்கன் போன்ற காய்கறிகளுக்கு பந்தல் அமைக்க மற்றும் வீரிய ஒட்டு இரகக் காய்கறி விதைகள் வழங்க 50% மானியம் வழங்கப்படும்.

## 17. காய்கறி மகத்துவ மையம்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின்** ஆணைப்படி, ரூ.14.40 கோடி நிதி ஒதுக்கீட்டில் இந்திய-இஸ்ரேல் காய்கறி சாகுபடியின் நவீன உத்திகளை கையாண்டு, திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் அரசு தோட்டக்கலைப் பண்ணையில் காய்கறி மகத்துவ மையம் ஒன்று அமைக்கப்படும்.

## 18. கொய்மலர் மகத்துவ மையம்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின்** ஆணைப்படி, ரூ.38.68 கோடி நிதி ஒதுக்கீட்டில் இந்திய-இஸ்ரேல் தொழில்நுட்பத்தில் கொய்மலர்கள் மகத்துவ மையம் கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டம் தளியில் அமைக்கப்படும்.

## 19. ரோஜா பூங்கா மற்றும் கொய்மலர் செயல்விளக்கக் கூடம்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின்** ஆணைப்படி, ரூ.3.5 கோடி நிதி ஒதுக்கீட்டில் சுற்றுலாப் பயணிகளை கவர்ந்திடும் வகையில், கொடைக்கானலில் உள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணையில் 4 எக்டர் பரப்பில் ரோஜா பூங்காவும், இப்பகுதி விவசாயிகளுக்கு கொய்மலர் சாகுபடி குறித்து தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கிட 0.4 எக்டர் பரப்பில் கொய்மலர் செயல்விளக்கக் கூடமும் நிறுவப்படும்.

## 20. உலகளாவிய தோட்டக்கலை கண்காட்சி

தோட்டக்கலை விவசாயிகளுக்கு புதிய தொழில் நுட்பங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், ஏற்றுமதி வாய்ப்பினை அதிகப்படுத்தவும் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின்** ஆணைப்படி, உலகளாவிய தோட்டக்கலை கண்காட்சி ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் சென்னையில் நடத்தப்படும்.

## 21. புதிதாக அரசு தோட்டக்கலைப் பண்ணை அமைத்தல்

திருச்சிராப்பள்ளி மாவட்ட விவசாயிகளின் தோட்டக்கலைப் பயிர்களின் தரமான நடவுச் செடிகளின் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு, **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின்** ஆணைப்படி, ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் ஸ்ரீரங்கத்தில் 10 ஏக்கர் பரப்பளவில் புதிதாக அரசு தோட்டக்கலைப் பண்ணை ஒன்று அமைக்கப்படும்.

## 22. உருளை விதைக்கிழங்குகள் உற்பத்திக்கு மானியம்

ஈரோடு மாவட்டம், தாளவாடி பகுதி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டம், தளி பகுதியில் தலா 10 எக்டர் வீதம் விவசாயிகளின் நிலங்களில் உருளை விதைக்கிழங்குகள் உற்பத்தி செய்வதற்கு **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின்** ஆணைப்படி, ரூ.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக, உருளை விதைக்கிழங்குகள் உற்பத்தி செய்யும் விவசாயிகளை ஊக்கப்படுத்தும் வகையில் 50% மானியம் அளிக்கப்படும்.

## 23. மேட்டுப்பாளையத்தில் குளிர்பதன வணிக வளாகம்

அறுவடைக்குப் பின் ஏற்படும் பெரும் இழப்பினை தவிர்க்க, **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின்** ஆணைப்படி, காய்கறிகள், பழங்கள் அதிகம் விளையும் கோயம்புத்தூர், நீலகிரி மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் மேட்டுப்பாளையத்தில் ரூ.4.60 கோடி மதிப்பீட்டில் 500 மெ.டன் கொள்ளளவுள்ள குளிர்பதன வசதியுடன் கூடிய வணிக வளாகம் அமைக்கப்படும்.

## 24. கிணத்துக்கடவில் குளிர்பதன கிடங்கு

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின்** ஆணைப்படி, ரூ.2.25 கோடி நிதி ஒதுக்கீட்டில் கோவை மாவட்டம் கிணத்துக்கடவு பகுதியில் காய்கறி மற்றும் பழங்களுக்கென 500 மெ.டன் கொள்ளளவுள்ள குளிர்பதன கிடங்கு அமைக்கப்படும்.

## 25. சங்கரன்கோவிலில் ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு குளிர்பதன வசதி

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின்** ஆணைப்படி, ரூ.2.25 கோடி மதிப்பீட்டில் மிளகாய் அதிகம் உற்பத்தி செய்யும் திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு 500 மெ.டன் கொள்ளளவுள்ள குளிர்பதன கிடங்கு அமைக்கப்படும்.

## 26. தேனியில் ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு குளிர்பதன வசதியுடன் கூடிய வணிக வளாகம்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின்** ஆணைப்படி, திராட்சை அதிகம் உற்பத்தி செய்யும் தேனி மாவட்டத்தில், கம்பம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் 500 மெ.டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதன வசதியுடன் கூடிய வணிக வளாகம் ரூ.3.45 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

## 27. வேளாண் சந்தை நுண்ணறிவு மற்றும் வணிக மேம்பாட்டு மையம்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின்** ஆணைப்படி, ரூ.43 இலட்சம் மதிப்பீட்டில் திருச்சியில் வேளாண் சந்தை நுண்ணறிவு மற்றும் வணிக மேம்பாட்டு மையம் புதிதாக அமைக்கப்படும். விளைபொருட்களின் விலை, சந்தை மற்றும் பயிர் சார்ந்த தகவல்களை சேகரித்து வேளாண் சந்தை நுண்ணறிவு மற்றும் வணிக மேம்பாட்டு மையத்திற்கு அனுப்பிட ஏதுவாக, ரூ.73.50 இலட்சம் மதிப்பீட்டில் 50 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களுக்கும், 21 விற்பனைக்குழுக்களுக்கும் கணினிகளும், சந்தை மற்றும் பயிர் சார்ந்த தகவல்களை விவசாயிகள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு வந்து அறிந்துகொள்ளும் வகையில் 50 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு தொடுதிரை கணினிகளும் வழங்கப்படும்.

## 28. பரிவர்த்தனைக் கூடம்

ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு கொண்டு வரப்படும் விளைபொருட்களை இயற்கை இடர்ப்பாடுகளிலிருந்து காக்கவும், பரிவர்த்தனை செய்யவும், **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின்** ஆணைப்படி, ரூ.4 கோடி நிதி ஒதுக்கீட்டில் மடத்துக்குளம், செஞ்சேரி, அவினாசி, பொங்கலூர், பென்னாகரம், அரியலூர், ஜெயங்கொண்டம், வாணியம்பாடி, டி.வாடிப்பட்டி மற்றும் வள்ளியூர் ஆகிய 10 இடங்களில் பரிவர்த்தனைக் கூடங்கள் அமைக்கப்படும்.

## 29. பரமத்தி வேலூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு சொந்த கட்டிடம்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின்** ஆணைப்படி, ரூ.1.25 கோடி மதிப்பீட்டில் நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு புதிதாக சொந்த கட்டிடம் கட்டித்தரப்படும்.

## 30. வணிகர் கடைகள்

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு வந்து செல்லும் விவசாயிகள் தங்களுக்குத் தேவையான இடுபொருட்களை ஒரே இடத்தில் பெறுவதற்கு வசதியாக **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின்** ஆணைப்படி, ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தில் 25 கடைகள் வணிகர்களுக்காக கட்டப்படும்.

## 31. "அக்மார்க்" ஆய்வகங்களுக்கு சொந்த கட்டிடங்கள்

"அக்மார்க்" ஆய்வகங்களை நவீனப்படுத்த, **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின்** ஆணைப்படி, ரூ.1.8 கோடி மதிப்பீட்டில் பண்ருட்டி, தஞ்சாவூர், தேனி, தூத்துக்குடி, சேலம், பெருந்துறை, திருப்பூர், காங்கேயம் மற்றும் வெள்ளக்கோவில் ஆகிய 9 இடங்களில் இயங்கி வரும் "அக்மார்க்" ஆய்வகங்களுக்கு நவீன ஆய்வக வசதியுடன் கூடிய சொந்த கட்டிடங்கள் கட்டித் தரப்படும்.

## 32. குளிர்பதன கிட்டங்கிகள் கட்டுதல்

வேளாண் விளைபொருட்களை பாதுகாத்திடவும், அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்பை குறைத்திடவும் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின்** ஆணைப்படி, ரூ.16.25 கோடி மதிப்பீட்டில் திருவண்ணாமலை, கடலூர், ஈரோடு, வேலூர், திருச்சி, கோவை, விழுப்புரம், தருமபுரி, இராமநாதபுரம், சேலம், திண்டுக்கல், கன்னியாகுமரி, தஞ்சாவூர், தேனி, மதுரை, திருநெல்வேலி மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் 25 மெ.டன் கொள்ளளவு கொண்ட 51 குளிர்பதன கிட்டங்கிகள் கட்டப்படும்.

## 33. காலிப்பணியிடங்கள் நிரப்புதல்

வேளாண்மைத் துறையில் நவீன தொழில்நுட்பங்களை மேற்கொள்ளும் வகையில், மாவட்டம் மற்றும் வட்டார அளவில் விரிவாக்கப் பணிகளை வலுப்படுத்தவும், வேளாண் தொழில்நுட்பங்கள் கிராம அளவில் விவசாயிகளிடம் சென்றடைவதை உறுதி செய்யவும் மற்றும் அனைத்து திட்டங்களையும் துரிதமாக செயல்படுத்த ஏதுவாக, **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின்** ஆணைப்படி, 504 வேளாண்மை அலுவலர்கள் மற்றும் 417 உதவி வேளாண்மை அலுவலர்கள் காலிப் பணியிடங்கள் நடப்பாண்டில் நிரப்பப்படும். மேலும், வட்டார விரிவாக்க அலுவலர்களுக்கு **மாண்புமிகு அம்மா அவர்களால்** வழங்கப்பட்ட புதிய ஈப்புகளுக்கு 151 ஓட்டுநர் காலிப் பணியிடங்களும் நடப்பாண்டில் நிரப்பப்படும்.

## 34. திராட்சை ஆராய்ச்சி மையம்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின்** ஆணைப்படி, தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கம்பம் பள்ளத்தாக்கு பகுதியிலுள்ள மள்ளிங்காபுரம் என்ற ஆனைமலையன்பட்டி பகுதியில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக நிதியுதவியுடன் திராட்சை ஆராய்ச்சி மையம் ஒன்று நிறுவப்படும்.

**செ. தாமோதரன்**
**வேளாண்மைத் துறை அமைச்சர்**

©
தமிழ்நாடு அரசு
2012